தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
மார்ச் 16, 2015 இதழுடன் இணைப்பு

மைக்ரோசாப்ட் தரும் மடிக்கக் கூடிய கீ போர்ட்

ஆப்பிள் வாட்ச் வெளியானது

ஆப்பிள் நிறுவனத்தின் புதிய மேக் கம்ப்யூட்டர்

ஆப்பிள் வாட்ச் வெளியானது

~ டாக்டர் பெ.சந்திர போஸ் ~

சென்ற செப்டம்பர் மாதம், ஆப்பிள் நிறுவனம், ஆப்பிள் வாட்ச் என்ற வரிசையில், டிஜிட்டல் ஸ்மார்ட் "கடிகாரங்களை" வெளியிட இருப்பதாக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, மார்ச் 9 அன்று அவை குறித்த முழு விபரங்களையும் வெளியிட்டுள்ளது. சான்பிரான்சிஸ்கோ நகரில், ஆப்பிள் அலுவலகத்தில், அழைக்கப்பட்ட பல நூறு பேர்களின் முன்னால், ஆப்பிள் நிறுவனத் தலைவர் டிம் குக், இந்த ஸ்மார்ட் கடிகாரங்களை வெளியிட்டு உரையாற்றினார். ஸ்போர்ட்ஸ், ஸ்டீல் மற்றும் வாட்ச் எடிஷன் என மூன்று வகைகளில், இருவேறு அளவுகளில் இவை கிடைக்கும்.

இவற்றின் தொடக்க விலை 349 டாலராகவும், 18 காரட் தங்க முலாம் பூசப்பட்ட உரையுடன்

உள்ளே

ஆப்பிள் நிறுவனத்தின் புதிய மேக் கம்ப்யூட்டர்	பக்கம் 6
செயலிகளைச் சட்டென முடக்கும் வழிகள்	பக்கம் 8
மைக்ரோசாப்ட் தரும் மடிக்கக் கூடிய கீ போர்ட்	பக்கம் 13

வாசகர்களே....

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துகளை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளைக் குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2014 செப்டம்பர் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக்கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிடவேண்டும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 39, ஓயிட்ஸ் ரோடு, இராயப் பேட்டை, சென்னை – 600 014
computermalar@dinamalar.in

கூடிய, ஆப்பிள் வாட்ச் எடிஷன் என்ற ஸ்மார்ட் வாட்ச் 10,000 டாலருக்கும் மேலாகவும் விலை இருக்கும் எனவும் அறிவித்தார். இதுவே, சிகப்பு பக்கிள் கொண்ட வாட்ச் எடிஷன் ஆக இருந்தால், விலை 17 ஆயிரம் டாலர். வரும் ஏப்ரல் 24 முதல், அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளில் கிடைக்கும். பின்னர், மற்ற நாடுகளில் விற்பனைக்கு வரும்.

ஆப்பிள் வாட்ச் என்பது, ஆப்பிள் நிறுவனத்தின் புதிய சாதனமாகும். இது ஒரு ஸ்மார்ட் வாட்ச். முன்பு, ஆப்பிள் நிறுவனம் ஐபாட் நானோவுடன் இணைந்து செயல்படும் வகையில் கைகளில் அணியக் கூடிய சாதனத்தினைத் தயாரித்து வழங்கியது. இப்போது வந்திருக்கும் ஆப்பிள் ஸ்மார்ட் வாட்ச் அதைப் போன்றது அல்ல. இது முற்றிலும் புதிய கட்டமைப்பில் உருவானதாகும். இது தன்னுடைய அப்ளிகேஷன்களைத் தானே இயக்கி செயல்படும். ஐபோன்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும் இயக்கத்தினையும் கொண்டிருக்கும்.

இவை குறித்த முக்கிய தகவல்களை இங்கு காணலாம்.

அலுமினியம் கேஸ் அமைந்த ஆப்பிள் வாட்ச் ஸ்போர்ட், சில்வர் மற்றும் கிரே வண்ணங்களில் வெளிவருகிறது. உயர் ரக பிளாஸ்டிக்கிலான சுற்று வளை, கரங்களைப் பிடித்தவாறு இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. 38 மிமீ அளவிலான வாட்ச் 349 டாலர். 42 மிமீ அளவிலானது 399 டாலர்.

ஸ்டீல் வெளித்தகடு மூடி கொண்ட ஆப்பிள் வாட்ச் 389 மற்றும் 1,049 டாலர் என அளவிற் கேற்ற வகையில் விலையிடப்பட்டுள்ளன. 18 காரட் தங்க முலாம் பூச்சு தகடு கொண்ட ஆப்பிள் வாட்ச் தொடக்க விலை 10,000 டாலர். அளவு அதிகரிக்கையில் விலையும் அதிகரிக்கிறது. ஏப்ரல் 10 முதல், அனைத்து மாடல் ஆப்பிள் வாட்ச்களுக்கும், வாங்குவதற்கான முன் பதிவினை மேற்கொள்ளலாம். ஏப்ரல் 24 முதல் ஆப்பிள் வாட்ச் பதிவு செய்தவர்களுக்கு அனுப்பப்படும்.

பெரும்பாலான நாடுகளில் இவை விற்பனைக்கு வருகின்றன.

ஆப்பிள் வாட்ச் இயக்க, ஐபோன் 5, ஐபோன் 5சி, ஐபோன் 5 எஸ் அல்லது ஐபோன் 6 ப்ளஸ் தேவை. இவற்றில் ஐ.ஓ.எஸ். 8.2 அல்லது பின்னர் வந்த ஆப்பரேட்டிங் சிஸ்டம் இருக்க வேண்டும். ஆப்பிள் ஐ.ஓ.எஸ். 8.2 சிஸ்டம் ஆப்பிள் வாட்ச் அப்ளிகேஷனை உங்கள் ஐபோனுடன் இணைக்கிறது. வாட்ச் இயங்கத் தேவையான அப்ளிகேஷன்களை, ஐ போன் மூலம், ஆப்பிள் ஸ்டோரிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பின்னர், வாட்சில் காட்டப்படும் அறிவிப்புகள் ஒழுங்கு படுத்தப்படுகின்றன.

இந்த கடிகாரம், நாம் வைத்து இயக்கும் ஐபோனுடன் வை பி அல்லது புளூடூத் மூலம் இணைந்து இயங்குகிறது. புளூடூத் கதிர்களின் எல்லைக்குள் இருக்க வேண்டும் என்பதில்லை. வீட்டில் எங்கு வைத்து வேண்டுமானாலும் இயக்கலாம்.

இதில் உள்ள பேட்டரி, ஒரு நாள் முழுவதும் செயல்படும். அதாவது அதிக பட்சம் 18 மணி நேரம் செயல்படும். எனவே, இரவில் இதனை முழுமையாக சார்ஜ் செய்திட வேண்டும். வாட்சின் வலது பக்கம் உள்ள மேக்னடிக் சர்குலர் சார்ஜரை இழுத்து சார்ஜ் செய்திட வேண்டும்.

ஆப்பிள் வாட்ச் ஒன்றை நேரடியாக இன்னொரு ஆப்பிள் வாட்சுடன் இணைக்கலாம். உங்களுடைய நண்பரின் கவனத்தை இதன் மூலம் திருப்பலாம். ஐபாட் போல இசையை இயக்கும்; இதயத் துடிப்பினை அறிவிக்கும் திறன் கொண்ட, உடல் நலம் பேணி தகவல் அளிக்கும் கடிகாரமாக இருக்கும்; செய்திகளை அனுப்பவும் வாங்கவும் செயல்படக் கூடிய ஒரு தகவல் தொடர்பு சாதனமாக இருக்கும்; போன் அழைப்புகளை இயக்கும், பெறும். பேச்சுக்களைப் பதிவு செய்திடும். மற்ற சில அப்ளிகேஷன்களை இயக்கும் இணைய தளம் போலவும் இயங்கும்.

ஐ.ஓ.எஸ். சிஸ்டத்தில் இயங்கும் கண்ட்ரோல் செண்டர் போல, ஆப்பிள் வாட்சின் திரையின்

கீழாக இருந்து ஸ்வைப் செய்திட்டால், Glances எனப்படும் அறிவிப்புகளைக் காணலாம். சீதோஷ்ண நிலை, மேப், மியூசிக் என இது பல வகையில் இருக்கும்.

மின் அஞ்சல்களை, கடிகாரத்தின் மணிக்கட்டினைத் திருப்பிப் பார்வையிடலாம். தேவையானவற்றைக் குறித்து வைக்கலாம். படித்துவிட்டதாக அமைத்திடலாம். வேண்டாம் என்றால் ட்ரேஷ் பெட்டிக்குத் தள்ளலாம்.

இதன் திரையில் இரு விரல்களை வைத்து சிறிது நேரம் அழுத்திப் பிடித்தால், வாட்சில் உள்ள இதயத்துடிப்பினை அளக்கும் சென்சார், துடிப்பினை அளந்து காட்டும்.

உங்களை யாராவது சந்திக்க வேண்டும் என விரும்பி, நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டால், நீங்கள் இருக்கும் இடத்தினை வாட்ச் அவருக்கு அறிவிக்கும்.

இத்தனைக்கும் மேலாக, இதில் உள்ள "ஆப்பிள் பே" என்னும் டூல் வழியாகப் பணம் செலுத்தலாம். இது தற்போதைக்கு அமெரிக்காவில் மட்டும் செயல்படும். மணிக்கட்டினை சிறிது அசைத்துக் காட்டி, பதிவு செய்யப்பட்டுள்ள கிரெடிட் கார்டைத் தேர்ந்தெடுத்தால், பணம் செலுத்தப் பட்டுவிடும். எனவே, பாக்கெட்டில் பணம், கிரெடிட் கார்ட் எதுவும் இல்லாமல், போனை மட்டும் எடுத்துச் சென்று பொருட்கள் வாங்கலாம்.

உங்களிடம் ஆப்பிள் டிவி இருந்தால், அதற்கான ரிமோட் கண்ட்ரோல் சாதனமாகவும் இதனை இயக்கலாம். வீடுகளில் இயங்கும் மற்ற ஆப்பிள் சாதனங்களுக்கும் தொடர்பு சாதனமாகப் பயன்படுத்தலாம். உங்கள் வீட்டில் ஸ்மார்ட் லாக் எனப்படும் டிஜிட்டல் பூட்டு இருந்தால், அதனை இந்த ஆப்பிள் வாட்ச் கொண்டு திறக்கலாம். செட் செய்த பின்னர், வாட்சை அதன் முன் அசைத்தால் போதும். கதவுகள் திறக்கப்படும்.

ஐபோனின் வயர்லெஸ் இணைப்பு திறனைப் பயன்படுத்தி, வீட்டில் இயங்கும் தெர்மோஸ்டெட் போன்ற சாதனங்களையும் இயக்கலாம்.

50 மில்லி செகண்ட் அளவிற்கு நேரத்தைத் துல்லியமாகக் காட்டும் கடிகாரமாகவும் இது இயங்கும். இந்த கடிகாரத்தின் டயல் பக்கத்தினை நாம் கற்பனையில் எண்ணும் வடிவத்தில் பல நூறு தனி வடிவங்களில் அமைத்துக் கொள்ளலாம். இதன் வண்ணங்களைத் தரும் திறனும் மிக அதிகம். அன்றைய சீதோஷ்ண நிலை மட்டுமின்றி, வரஇருக்கும் வாரத்தில் ஒவ்வொரு நாளும் எப்படி இருக்கும் என்பதனையும் காட்டும். நாம் அமைத்துக் கொள்ளும் நம் வேலை நேரத் திட்டத்தினையும் ஏற்றுக் கொண்டு, குறிப்பிட்ட நாட்களில், நேரத்தில் நினைவு படுத்தும்.

மற்ற ஸ்மார்ட் வாட்சுகளுடன் இணைந்து ஒரே இயக்கத்தினைத் தரும் சாதனமாகவும் இதனைப் பயன்படுத்தலாம்.

ஐபோன் 5 மற்றும் அதன் பின்னர் வந்த சாதனங்களுடன் புளூடூத் மற்றும் வை பி வழியாக

இணைந்து இது இணைவாகச் செயலாற்றும். ஐபோனுக்கு வரும் நோட்டிபிகேஷன்ஸ், மின் அஞ்சல் தகவல்கள், காலண்டர் நினைவூட்டல்கள், டெக்ஸ்ட் மெசேஜ், போன் அழைப்புகள் ஆகியவற்றைக் காட்டும்.

இதில் காட்டப்படும் மூன்று வளையங்கள், நீங்கள் எத்தனை கலோரி சத்தினை எரித்துள்ளீர்கள் என்று காட்டும். மேற்கொள்ளப்படும் உடல் பயிற்சி வகையினை ஒரு வளையம் காட்டும். எத்தனை முறை நீங்கள் உட்கார்ந்து எழுந்தீர்கள் என்பதை இன்னொருவளையம்காட்டும். அதாவது ஒரு நாளில், நீங்கள் இந்த வகைகளில் ஒரு வளையத்தை முழுமையாக்க வேண்டும் என்பதே இதன் அடிப்படை. நீங்கள் எழாமல், உட்கார்ந்தே தொடர்ந்து வேலை செய்தால், இந்த வாட்ச் அலாரம் ஒன்றை அடித்து, நீங்கள் எழுந்து செல்ல வேண்டிய நேரம் என்று காட்டும்.

விமானப் பயணங்களுக்கான போர்டிங் பாஸ், நீங்கள் கவனித்து வரும் நிறுவனப் பங்குகளின் விலை ஆகியவற்றைத் தொடர்ந்து காட்டும். இதில் உள்ள சீதோஷ்ண நிலை காட்டும் அப்ளிகேஷன், அன்றைய சீதோஷ்ண நிலையயும், வரும் வாரத்திற்கான சீதோஷ்ண நிலை அறிவிப்பினையும் காட்டும்.

தர்ட் பார்ட்டி நிறுவனங்கள் தரும் அப்ளிகேஷன்கள் இன்னும் பலவகையான அறிவிப்புகளைக் காட்டும், எடுத்துக் காட்டாக, ஹோட்டல் ஒன்று தனக்கென ஓர் அப்ளிகேஷனை உருவாக்கி இருந்தால், அது ஆப்பிள் வாட்சில் இணைக்கப்படுகையில், அந்த விடுதியில் நீங்கள் பதிவு செய்த அறை, எந்த நேரத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அறிவிப்பு ஆகியவை காட்டப்படும்.

ஆனால், இவற்றை ஆப்பிள் நிறுவன அறிவிப்பில் கேட்கும் போது, ஒரு கேள்வி நம் மனதில் எழுகிறது. இந்த டிஜிட்டல் வசதிகளைத் தரும் வாட்ச் சந்தையில், ஆப்பிள் தாமதமாகத்தானே நுழைந்துள்ளது. ஏற்கனவே, மோட்டாரோலாவின் மோட்டோ 360, ஆண்ட்ராய்ட் மற்றும் ஐ,ஓ.எஸ். இயக்கத்துடன் இணைந்து இயங்கும் பெப்பிள் வாட்ச், மற்றும் சாம்சங், எல்.ஜி. ஆகியவற்றின் வாட்ச்கள் ஏற்கனவே சந்தையில் புழக்கத்தில் உள்ளன. இவை தரும் அம்சங்களை எல்லாம் எடுத்து, தன் இயக்கமாக, சில நகாசு வேலைகளுடன், ஆப்பிள் தன் ஆப்பிள் வாட்ச் சாதனத்தில் தந்துள்ளது. பெரிய வித்தியாசம் என்னவென்றால், இதன் விலையும் வடிவமைப்புமே. கூடவே, ஆப்பிள் நிறுவனத்தின் பெயரும் இணைய, இது இன்று புதியதாய்ப் பிறவி எடுத்த தோற்றத்துடன் சந்தையில் நுழைந்துள்ளது. புதிய கட்டமைப்பு, தோற்றம் மற்றும் சில வசதிகளுக்காக மக்கள் இதனை விரும்பி வாங்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆப்பிள் நிறுவனத்தின் புதிய மேக் கம்ப்யூட்டர்

–பாரதி–

சென்ற வாரம், செவ்வாய் அன்று, தன்னுடைய புதிதாக வடிவமைக்கப்பட்ட 12 அங்குல திரை கொண்ட, 13.1 மிமீ தடிமன் கொண்ட மேக் புக் கம்ப்யூட்டரை, ஆப்பிள் நிறுவனம் வெளியிட்டது. தொடக்க நிலையில் உள்ள ஆப்பிள் மேக் புக் ஏர் மற்றும் உயர் நிலையில் உள்ள, ஆப்பிள் மேக் புக் ப்ரோ ஆகியவற்றிற்கு இடையே இது இடம் பெறுகிறது. இதன் சிறப்பம்சங்களாக, 13 மிமீ அளவிலான இதன் அடிப்பாகம், 907 கிராம் எடை, நாள் முழுவதும் மின் சக்தி தரக் கூடிய பேட்டரி ஆகியவற்றைக் கூறலாம். இன்டெல் கோர் எம் ப்ராசசர் மற்றும் பேட்டரியால், குறைந்த தடிமனில் கம்ப்யூட்டர் அமைந்துள்ளது. இந்த ப்ராசசர், உள்ளாக வெப்பத்தை வெளியேற்றும் மின் விசிறி தேவையை நீக்குகிறது. எனவே கம்ப்யூட்டரின் எடை கணிசமாகக் குறைந்துள்ளது. இந்த மேக் புக் கம்ப்யூட்டரில் தான், ஆப்பிள் முதல் முறையாக, யு.எஸ்.பி. /சி போர்ட்டினைத் தந்துள்ளது. இது பவர், விடியோ அவுட்புட் மற்றும் டேட்டா ஆகிய அனைத்திற்கும் ஒன்றாக, ரிவர்ஸ் அமைப்பில் உள்ளது.

இந்த மேக் புக் கம்ப்யூட்டர் மூன்று வண்ணங்களில், சில்வர், கிரே மற்றும் தங்க நிற வண்ணங்களில், வடிவமைக்கப்பட்டு கிடைக்கும். இந்த தங்க நிற கம்ப்யூட்டர், இதே நிறத்தில் ஏற்கனவே வெளியான ஐபோன் மற்றும் ஐபேட் ஆகியவற்றுடன் இணையாகக் காட்சி அளிக்கும் வகையில் அமைகிறது. கம்ப்யூட்டர் மூடியைத் திறந்தவுடன், அது அமைக்கப்பட்டிருக்கும் உறை, மனங்கவரும் தோற்றத்தில் உள்ளது.

11 அங்குல மேக் புக் ஏர் கம்ப்யூட்டரைக் காட்டிலும் சற்று சிறியது போலக் காட்சி அளிக்கிறது. இதன் திரை இரண்டு மூலைகளையும்

தொட்டு அமைக்கப்பட்டுள்ளது. மேக்புக் ப்ரோ கம்ப்யூட்டரில் உள்ள ரெடினா திரை போன்று காட்சி அளிக்கிறது. திரை அமைப்பு விகிதம் 16:10 ஆகவும், ரெசல்யூசன் 2,304 x 1440 ஆகவும், தரப்படவில்லை. இதனால், Display Port, HDMI, USB 2.0/3.0, மற்றும் VGA ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனி அடாப்டர்களை வைத்து இயக்க வேண்டியதிருக்கும். கம்ப்யூட்டருடன் USB- C சார்ஜர் வழங்கப்படுகிறது. இது மற்ற சாதனங்களுடன், தனியே ஒரு அடாப்டர் இல்லாமல் செயல்படாது. 802.11ac and Bluetooth 4.0 ஆகியன கம்ப்யூட்டரிலேயே தரப்பட்டுள்ளதால், வை பி இணைப்பு குறித்து தனியே இணைப்பு வேண்டும் என கவலைப் பட வேண்டியதில்லை.

சிஸ்டத்தின் எடை மிகவும் குறைவாக இருப்பதால், எங்கும் எடுத்துச் செல்வது எளிதாகிறது.

ஏப்ரல் 24 அன்று வாடிக்கையாளர்களுக்கு இந்த லேப்டாப் கம்ப்யூட்டர் கிடைக்கும்போது, அது ஒரு புதிய கண்டுபிடிப்பு போன்ற அனுபவத்தினைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

256 ஜி.பி. அளவிலான கம்ப்யூட்டர் 1299 டாலர் என விலையிடப்பட்டுள்ளது. இரண்டு மடங்கு அதிக ஸ்டோரேஜ் மற்றும் சற்று கூடுத

ஆகவும் உள்ளது. இதனால், திரையில் கிடைக்கும் காட்சி மிகத் துல்லியமாகவும் தெளிவாகவும் அமைகிறது. அதில் உள்ளவற்றைப் படிப்பதுவும் எளிதாகிறது.

இதில் அமைக்கப்பட்டுள்ள புதிய கீ போர்ட், மேக் புக் ஏர் கம்ப்யூட்டரின் கீ போர்டைக் காட்டிலும், தடிமன் குறைவாக உள்ளது.

இதில் தரப்பட்டுள்ள போர்ஸ் டச் (Force Touch) ட்ரேக் பேட், தொட்டு இழுத்தவுடன் உடனடியாக வேலை செய்கிறது. கிளிக் செய்து கிடைக்கும் பலன் தெரிகிறது. வழக்கமான மல்ட்டி டச் செயல்பாடு இதில் உள்ளது. இரண்டு மற்றும் மூன்று விரல்கள் தொடு அமைப்பு விசை இதில் கிடைக்கிறது.

இந்த ட்ரேக் பேடில், போர்ஸ் டச் (Force Touch) என்ற விசை அமைப்பு புதியதாகத் தரப்பட்டுள்ளது. தேவைப்பட்டது கிளிக் ஆகிவிட்டது என்ற கணம் வரை சற்று அழுத்திச் செயல்படுத்தலாம். இது ஏறத்தாழ மவுஸ் ரைட் கிளிக் போலச் செயல்படுகிறது. இந்த Force Touch வசதி, ரெடினா டிஸ்பிளே கொண்ட மேக்புக் ப்ரோ 13 அங்குல கம்ப்யூட்டர் மற்றும் ஆப்பிள் வாட்சிலும் தரப்பட்டுள்ளது.

இந்தக் கம்ப்யூட்டரில் ஒரே ஒரு யு.எஸ்.பி. சி வகை போர்ட் தரப்பட்டுள்ளது. இதுவே பவர் சார்ஜிங் மற்றும் ஹெட்செட் இணைக்கப் பயன் படுத்தலாம். வழக்கமான யு.எஸ்.பி. போர்ட் லான வேகத்தில் இயங்கும் ப்ராசசர் கொண்ட கம்ப்யூட்டர் 1,599 டாலர் என விலையிடப் பட்டுள்ளது. இந்த இரண்டிலும் ராம் மெமரி 8 ஜி.பி. இதனை உயர்த்த முடியாது.

பன்னாட்டளவில் ஆப்பிள்

ஆப்பிள் வாட்ச், மேக் கம்ப்யூட்டர் வெளியீட்டின் போது, சில தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. ஆப்பிள் நிறுவனத்திற்கு தற்போது 16 நாடுகளில், 453 தனி விற்பனை மையங்கள் இயங்குகின்றன. சீனாவில் 21 விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு மையங்கள், கடந்த இரண்டு மாதங்களில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனை மையங்கள் மூலம், ஆப்பிள் 12 கோடி வாடிக்கையாளர்களை அடைய முடிகிறது.

செயலிகளைச் சட்டென மூடக்கும் வழிகள்

விண்டோஸ், ஆப்பிள் மேக், ஐபோன், ஐபேட் மற்றும் ஆண்ட்ராய்ட் சாதனங்களில், செயலிகள் இயங்கிக் கொண்டிருக்கும் போதே, எந்த செயல்பாட்டையும் தொடராமல், விக்கித்து நிற்பது போல நிற்கலாம். இவை தொடருமா? என்ற கேள்விக்கு நமக்குப் பதில் கிடைக்காது. இவற்றை மூடிவிட்டு, பின்னர் திறந்து இயக்கவும் எந்த வழியும் கிடைக்காது. இதற்காக, இயக்கத்தில் இருக்கும் மற்ற புரோகிராம்களின் இயக்கத்தை நிறுத்தி, கம்ப்யூட்டரை ரீ பூட் செய்வதும் நேரத்தை வீணடிக்கும் முயற்சியாகும். அப்படியானால், இவற்றை எப்படித்தான் மூடுவது? என்ற கேள்வி எழுகிறது. அதற்கான, செயல்படுத்தக் கூடிய சில வழிகளை இங்கு காணலாம்.

ஒவ்வொரு ஆப்பரேட்டிங் சிஸ்டமும், இது போல எந்த வழியிலும் செல்லாமல், இயங்காமல் நிற்கும் அப்ளிகேஷன்களை, வலுக்கட்டாயமாக நிறுத்த சில வழிகளைக் கொண்டுள்ளன. அந்த வழியைப் பின்பற்றி இந்த புரோகிராம்களை மூடிவிட்டால், பின் மீண்டும் இயக்கும் போது, சரியாக அவை இயங்கத் தொடங்கும். அந்த வழிகள் எவை எனக் காணலாம்.

ஐபோன் மற்றும் ஐபேட்

இயங்கிக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன் ஒன்றை ஐபோன் அல்லது ஐபேடில், வலுக்கட்டாயமாக நிறுத்த, ஹோம் பட்டனை இருமுறை அழுத்தவும். இது உடனே, இயங்கிக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன்களின் பட்டியலைக் காட்டும். இடம் வலமாகச் சென்று, எந்த அப்ளிகேஷனை வலுக்கட்டாயமாக நிறுத்த வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுக்கவும். அந்த அப்ளிகேஷனுடைய தம்ப்நெய்ல் படத்தினைத் தொட்டு, மேல்புறமாக இழுத்து, திரைக்கு அப்பால் விட்டுவிட்டால், அப்ளிகேஷன் இயங்குவது நிறுத்தப்படும். அடுத்த முறை, இயக்கப்படும்போது, அப்ளிகேஷன் சரியாக இயங்கி செயல்படும். இவ்வாறு நிறுத்துவதனால், இயக்க முறைமைகள் சேவ் செய்யப்படுவது இல்லை. மேலும், நீங்கள் அந்த புரோகிராமினை இயக்கப் போவது இல்லை என்றாலும்



அப்படியே விட்டுவிடலாம். ஆனால், அப்ளிகேஷன் ஒன்று, இவ்வாறு முறையற்ற முறையில் நின்று போவது சரியல்ல. அதனை, இவ்வாறு நிறுத்துவதே சரியான வழி.

ஆண்ட்ராய்ட்

அப்ளிகேஷன்களை ஆண்ட்ராய்ட் இயக்கத்தில் நிறுத்துவதற்கான வழி recent app switcher டூலைப் பயன்படுத்துவதுதான். சில சாதனங்களில், அண்மையில் பயன்படுத்திய அப்ளிகேஷன்களைக் காட்டும் பட்டன் இருக்காது. அந்த சாதனங்களில், ஹோம் பட்டனைத் தொடர்ந்து அழுத்தி, இந்த செயல்பாட்டினை மேற்கொள்ளலாம். இங்கும் அப்ளிகேஷனுடைய தம்ப் நெய்ல் படம் அல்லது பட்டியலில் அதன் பெயரைத் தொட்டு இழுத்து திரைக்கு மேலாக விட்டுவிடலாம். அப்ளிகேஷன் மூடப்பட்டு, அடுத்த முறை இயக்கப்படுகையில், புதியதாய்த் தொடங்கப்படும்.

ஐ,ஓ.எஸ். சிஸ்டத்தில் மேற்கொண்டது போல, ஆண்ட்ராய்ட் சாதனங்களில் வலுக்கட்டாயமாக ஓர் அப்ளிகேஷனை நிறுத்துவதனை மேற்கொள்ளக் கூடாது. ஆண்ட்ராய்ட் சிஸ்டமே, அது போலச் செயல்படும் அப்ளிகேஷன்களை நிர்வகித்திடும்.

விண்டோஸ்

விண்டோஸ் இயக்கத்தில், இது போல உறைந்து நிற்கும் அப்ளிகேஷன்களை முழுமையாக நிறுத்த டாஸ்க் மானேஜர் (Task Manager) டூல் பயன்படுகிறது. டாஸ்க் மானேஜரைத் திறக்க, பலரும் Ctrl+Alt+Delete பயன்படுத்துவார்கள். சற்று விரைவாக இதனைத் திறக்க, டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்து, டாஸ்க் மானேஜர் ஷார்ட் கட் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தலாம். அல்லது Ctrl+Alt+Escape பயன்படுத்தலாம். விண்டோஸ் 8 சிஸ்டத்தில், இன்னும் சற்று வசதியான டாஸ்க் மானேஜர் தரப்பட்டுள்ளது. இதில், எந்த அப்ளிகேஷனை நிறுத்த வேண்டுமோ, அதனைத் தேடி, 'End task" பட்டனை அழுத்தினால் போதும். விண்டோஸ் 8 சிஸ்டத்தில், டாஸ்க் மானேஜரில், "Store apps" பயன்படுத்தி அப்ளிகேஷனை நிறுத்தலாம். அல்லது, முரண்டு பிடிக்கும் அப்ளிகேஷன் விண்டோவின் திரையில், மேலாக விரலை வைத்து, கீழாக இழுத்துவிடலாம். அப்ளிகேஷன் ஒரு தம்ப் நெய்ல் படமாக மாறும் வரை இழுத்து விட வேண்டும். அல்லது, தம்ப்நெய்ல் படம், அப்ளிகேஷன் டைலாக மாறும் வரை இழுத்து, பின் விட்டுவிட வேண்டும். விண்டோஸ் அதனை நிறுத்திவிடும்.

தெரிந்துகொள்ளுங்கள்

Pinned: *பின் செய்யப்பட்ட அல்லது குத்தி வைக்கப்பட்ட என்ற பொருளைக் கொண்ட இந்த சொல், விண்டோஸ் சிஸ்டத்தில், நாம் அடிக்கடி பயன்படுத்தும் அப்ளிகேஷன் புரோகிராம்களை, உடனடியாக எடுத்துப் பயன்படுத்தும் வகையில் அமைப்பதனைக் குறிக்கிறது. அப்ளிகேஷன்கள் மட்டுமின்றி, புரோகிராம்கள், இணைய தளங்களுக்கான லிங்க் என எதனையும் பின் செய்து வைக்கலாம். இவற்றை ஒரு மெனுவில் வைத்து, நாம் விரும்பும்போது இயக்கலாம். எடுத்துக் காட்டாக, விண்டோஸ் விஸ்டா ஸ்டார்ட் மெனு, இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேலாக உள்ள பாதிப் பிரிவு, இது போன்ற பின் செய்யப்படும் புரோகிராம்களுக்கானது. எந்த புரோகிராம்களை எல்லாம் நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோமோ, அவற்றை இதில் பதிந்து வைக்கலாம்.*

Email harvesting: *டிஜிட்டல் உலகத்தில், ஏற்றுக் கொள்ளப்படாத தவறான செயல்பாடு. மின் அஞ்சல் முகவரிகளை மொத்தமாகத் திருடுவதற்கு ஒப்பானது. இவற்றைக் கட்டணம் செலுத்தி வாங்குவதற்குப் பல வர்த்தகர்கள் உள்ளனர். பெரும்பாலும் ஸ்பாம் மெயில்களை அனுப்ப, இத்தகைய மின் அஞ்சல் பொதிகளைப் பயன்படுத்துவார்கள். போட்டிகளை நடத்தும் இணைய தளங்கள், ஏதேனும் ஒரு கவர்ச்சிகரமான திட்டத்தினைக் கூறி மின் அஞ்சல் முகவரிகளைப் பெறும் இணைய தளங்கள், அந்த வகையில் தாங்கள் பெறும் மின் அஞ்சல் முகவரிகளைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்றுவிடுகின்றனர். அமெரிக்காவில் 2003 ஆம் ஆண்டு* CAN-SPAM Act *என்ற சட்டத்தின் கீழ் இது தடை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மின் அஞ்சல் முகவரியையும், அதற்கு உரியவரின் அனுமதி பெற்ற பிறகே, வேறு ஒருவர் அல்லது நிறுவனம் அல்லது இணைய தளம் பெற வேண்டும் என இந்தச் சட்டம் கட்டாயமாக்கியுள்ளது.*

வேர்ட் டிப்ஸ்...

Microsoft Office

காப்பி / பேஸ்ட்

வேர்ட் டாகுமெண்ட்களைத் தயாரிக்கையில், வேறு ஒரு பைலில் இருந்து டெக்ஸ்ட் காப்பி செய்து ஒட்டும் வேலையை மேற்கொள்வோம். அப்போது டெக்ஸ்ட் ஏற்கனவே எந்த பார்மட்டில் உள்ளதோ, அதே பார்மட்டில் ஒட்டப்படும். இது ஒட்டப்படும் டாகுமெண்ட்டுடன் ஒத்துப் போகாத வகையில், தேவையற்ற போல்ட், இடாலிக்ஸ் ஆகியவற்றுடன் அமைக்கப்படும்.

இப்படி இல்லாமல், ஒட்டப்படும் டெக்ஸ்ட்டின் பார்மட்டுக்கு ஏற்ற வகையில் அமைத்திட வேர்ட் வழி ஒன்றைக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட்டினை Ctrl + C கொடுத்து காப்பி செய்திடுகிறோம். பின்னர் கண்ட்ரோல் + வி கொடுத்து ஒட்டுகிறோம். இதற்குப் பதிலாக, Ctrl + Alt + V கொடுத்துப் பாருங்கள். உடன் Paste Options என்னும் விண்டோ கொடுக்கப்படும். இதில் ஒட்டப்படும் டெக்ஸ்ட் எந்த பார்மட்டில் இருக்க வேண்டும் என்பதற்கான வகைகள் தரப்படும். அவை: Microsoft Word Object, Formatted Text (RTF), Unformatted Text, Picture (Windows Metafile), Picture (Enhanced Metafile), HTML format, Unformatted Unicode Text. இவற்றில் Unformatted Text என்பதனைத் தேர்ந்தெடுத்தால், எடுக்கப்பட்ட பைலில் இருந்த பார்மட்டிங் விஷயங்கள் எதுவுமின்றி, ஒட்டப்படும் டாகுமெண்ட் பார்மட்டில், டெக்ஸ்ட் ஒட்டப்படும்.

காப்பி அல்லது மூவ்

வேர்ட் டாகுமெண்ட் தயாரிக்கும்போது, குறிப்பிட்ட டெக்ஸ்ட்டினை கிளிப் போர்டில் வைத்திருப்போம். அதனைப் பல இடங்களில் ஒட்ட வேண்டியதிருக்கும். இது சில வேளைகளில் படமாகக் கூட இருக்கலாம். அப்போது வேறு ஒரு டெக்ஸ்ட்டை எடுத்து இன்னொரு இட்த்தில் ஒட்ட எண்ணும்போது அதனை காப்பி செய்தால், கிளிப் போர்டில் உள்ள டெக்ஸ்ட் அல்லது படம் மறைந்துவிடும். ஆனால், அதனை மீண்டும் காப்பி செய்வது சற்று நேரம் எடுக்கும் செயலாக இருக்கலாம். அப்படிப் பட்ட வேளைகளில், கிளிப் போர்டுக்கு காப்பி செய்திடாமலேயே, டெக்ஸ்ட்டை இன்னொரு இட்த்தில் பேஸ்ட் செய்திடும் வழியைக் கடைப் பிடிக்கலாம்.

1. முதலில் வேறு ஒரு இடத்தில் ஒட்ட வேண்டிய டெக்ஸ்ட்டினைத் தேர்ந்தெடுக்கவும்.
2. தொடர்ந்து Shift+F2 கீகளை அழுத்தவும்.
3. அடுத்து, கர்சரை, டெக்ஸ்ட்டை எந்த இடத்தில் ஒட்ட வேண்டுமோ, அங்கு கொண்டு சென்று அமைக்கவும். இனி, என்டர் தட்டினால், டெக்ஸ்ட் கர்சர் இருக்கும் இடத்தில் ஒட்டப்படும்.

டெக்ஸ்ட்டில் ட்ராப் ஷேடோ

வேர்ட் டாகுமெண்ட்டில் பாராக்களுக்கு பார்டர் அமைக்கலாம் என்பதனைத் தெரிந்து வைத்திருப்பீர்கள். இதனுடன் இன்னும் ஒரு படி மேலே சென்று, குறிப்பிட்ட டெக்ஸ்ட்டிற்கு எப்படி ட்ராப் ஷேடோ அமைத்து அழகு படுத்தலாம் எனப் பார்க்கலாம்.

ட்ராப் ஷேடோ (drop shadow) என்பதுவும் ஒருவகை பார்டரே. இது இரண்டு பக்கங்களில், மற்ற இரு பக்கங்களில் இருப்பதைக் காட்டிலும் சற்று அகலமாக இருக்கும். இது அச்சில் வரும் போது, இந்த குறிப்பிட்ட டெக்ஸ்ட் மட்டும் மற்ற வற்றிலிருந்து சற்று உயரமாகத் தனியே காட்டப் படும். இதனை எப்படி அமைப்பது?

1. எந்த பாராவில் ட்ராப் ஷேடோவினை இணைக்க வேண்டுமோ, அதில் கர்சரை நிறுத்தவும்.
2. பார்மட் (Format) மெனுவில் இருந்து Borders and Shading என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் Borders டேப் திறக்கப்பட்ட நிலையில் Borders and Shading டயலாக் பாக்ஸினைக் காட்டும்.
3. இங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டவை காட்டப்படும் இடது புறமான பட்டியலில் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.
4. தொடர்ந்து Width drop-down பட்டியலில், கோடு எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

Microsoft Excel Tips & Tricks எக்ஸெல் டிப்ஸ்...

டேட்டாக்களை வரிசைப்படுத்த

எக்ஸெல் தொகுப்பில் நாம் பலவகையான டேட்டாக்களை அடுக்கி வைக்கிறோம். அவற்றை பல்வேறு நிலைகளில் நாம் வரிசைப்படுத்திப் பார்க்க வேண்டியதிருக்கும். அகரவரிசைப்படி, குறைந்த மதிப்பு அல்லது உயர்ந்த மதிப்பு என வரிசைப் படுத்த வேண்டியதிருக்கும். இதனை எப்படி மேற்கொள்வது என்று இங்கு பார்க்கலாம்.

முதலில் எக்ஸெல் தொகுப்பிற்கு எந்த டேட்டாவை வரிசைப்படுத்த வேண்டும் என சொல்ல வேண்டும். இதனை மேற்கொள்ள முதலில் டேட்டா இருக்கும் செல்லினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரே ஒரு செல்லை மட்டும் வரிசைப் படுத்துவதாக இருந்தால் Sort Ascending அல்லது Sort Descending பட்டனைத் தேர்ந்தெடுக்கவும். எந்த செல்லைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ அந்த செல் அந்த பீல்டின் காலத்தில் இருப்பதனை உறுதி செய்து கொள்ளவும். இந்த இரு பட்டன்களும் Standard டூல்பாரில் உள்ளன.

ஒரே வகை டேட்டா இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட வகை டேட்டாவினை (எடுத்துக் காட்டாக பெயர் மற்றும் பிறந்த தேதி) வரிசைப் படுத்த வேண்டும் என்றால் நீங்கள் எக்ஸெல் தொகுப்பிற்கு வேறு வகையில் இதனைத் தெரியப்படுத்த வேண்டும். எந்த பீல்டுகளை வரிசைப்படுத்த வேண்டும் எனவும் எந்த வகையில் அவற்றை அடுக்க வேண்டும் எனவும் கூற வேண்டும். இதற்கு முதலில் Data மெனு செல்லவும். அதில் குணிணுர! என்னும் பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இந்த Sort விண்டோவில் மூன்று வகையில் பிரிப்பதற்கு, அவற்றில் எதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு என வழிகள் தரப் பட்டிருக்கும். ஒவ்வொன்றையும் கிளிக் செய்து கிடைக்கும் பட்டியலில் நீங்கள் விரும்பும் டேட்டா செல்லுக்கான பெயரைத் தேர்ந்தெடுத்து முன்னுரிமைக்கேற்றபடி அமைக்கவும். அவை ஒவ்வொன்றிலும் கீழிருந்து மேலாகவும் மேலிருந்து கீழாகவும் (உயர்ந்த மதிப்பு/குறைந்த மதிப்பு) அமைக்க ascending அல்லது descending தேர்ந்தெடுக்கவும். வகைப்படுத்த வேண்டிய டேட்டா செல்களுக்கு நீங்கள் ஹெடர் வரிசை “Header row” ஒன்று கொடுத்திருந்தால் அதனைக் குறிப்பிட வேண்டும். இதற்கு கீழாக வசதி தரப்பட்டிருக்கும். இதனை நீங்கள் செலக்ட் செய்யாவிட்டால் எக்ஸெல் ஹெடரிலுள்ள சொல்லையும் எடுத்துக் கொண்டு பிரித்து அதற்கென ஒரு இடம் கொடுத்துப் பிரிக்கும். அல்லது ஹெடர் வரிசை நீங்கள் கொடுக்க வில்லை என்றால் “No header row” என்பதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அனைத்தும் முடிந்தவுடன் ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இப்போது உங்கள் டேட்டா தொகுப்பு நீங்கள் விரும்பியபடி வகைப்படுத்தப்பட்டு அழகாகக் கிடைக்கும். மீண்டும் வேறு ஒரு செல்லில் உள்ள டேட்டாவினையும் சேர்த்து வகைப்படுத்திடத் திட்டமிட்டால் அதனை மாற்றித் தேர்ந்தெடுத்து வகைப்படுத்தலாம்.

செல்களைக் குழுவாகக் கட்டமிட

எக்ஸெல் தொகுப்பில் டேட்டாக்களைக் கொடுத்து பணியாற்றிக் கொண்டிருக்கையில் குறிப்பிட்ட செல்களை ஒரு குரூப்பாகக் கட்டம் கட்ட வேண்டும் என எண்ணு கிறீர்களா? அப்போது நீங்கள் கட்டமிட விரும்பும் செல்களை ஹைலைட் செய்து தேர்ந்தெடுத்து பின் Ctrl+Shift+& அழுத்துங்கள். அழகாகக் கட்டம் கட்டி காணப்படும். அதன்பின் கட்டமிட்ட செல்களில் பார்டரை எப்படி நீக்குவது என யோசிக்கிறீர்களா? முன்பு போலவே கட்டமிட்ட செல்களை ஹைலைட் செய்து தேர்ந்தெடுத்து பின் Ctrl+Shift+_ஆகிய கீகளை அழுத்தவும். அனைத்து பார்டர்களும் காணாமல் போச்சா!

படுக்கை வரிசை இணைக்க

எக்ஸெல் ஒர்க்ஷீட்டில், புதிய படுக்கை வரிசைகளை குறிப்பிட்ட இடத்தில் இணைக்க நமக்கு வசதிகள் தரப்பட்டுள்ளன. எந்த வரிசையின் கீழாகக் கூடுதல் வரிசை வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுத்து, பின்னர் இன்ஸெர்ட் (Insert) மெனு சென்று, அதில் Rows தேர்ந்தெடுத்து கிளிக் செய்வோம். இதன் மூலம் ஒரே ஒரு வரிசை நமக்குக் கிடைக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வரிசை வேண்டும் எனில் என்ன செய்கிறோம்? இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. மேலே கூறியபடி வரிசை ஒன்றை இணைத்த பின்னர், f4 பட்டனை அழுத்தினால், அடுத்தடுத்து வரிசைகள் இணைக்கப்படும்.

அரசு தரும் டிஜிட்டல் லாக்கர்

இந்திய அரசின் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை, பொதுமக்களுக்கு தங்கள் ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திட, டிஜிட்டல் லாக்கர் வசதியை வழங்குகிறது. அது எப்படி ஆவணங்களைக் கொண்டு போய், க்ளவ்ட் கம்ப்யூட்டிங் முறையில் இயங்கும் ஒரு லாக்கரில் வைக்க முடியும்? என்ற கேள்வி எழுகிறதா? மேலே படியுங்கள்.

இந்த டிஜிட்டல் லாக்கர் வசதியைப் பெற உங்களுக்கென ஆதார் அட்டை மற்றும் மொபைல் போன் எண் இருக்க வேண்டும். ஆதார் அட்டை எண்ணுடன் இந்த லாக்கர் வசதி இணைக்கப்படும். இந்த லாக்கரில், உங்கள் ஆவணங்களின் மின்னணு நகல்களைப் பாதுகாப்பாக வைக்கலாம். அரசின் பல்வேறு துறைகள் உங்களுக்கு வழங்கும் டிஜிட்டல் ஆவணங்களையும் இதில் சேவ் செய்து வைக்கலாம். இதில் உள்ள ஆவணங்களில், நீங்கள் உங்கள் மின்னணு கையெழுத்தினையும் (e-signature) போடலாம்.

இதனைப் பெற https://www.digilocker.gov.in/ என்ற தளத்திற்குச் செல்லுங்கள். உங்கள் பிரவுசர் இந்த தளத்தின் பாதுகாப்பு குறித்து சந்தேகச் செய்தி தரும். அதனைப் புறக்கணித்து தொடரவும். ஏனென்றால், அரசு இந்த தளத்திற்கான பாதுகாப்பு சான்றிதழைப் பெறவில்லை என்று தெரிகிறது.முதலில், உங்களைப் பற்றிய தகவல்கள், ஆதார் எண், மொபைல் போன் எண் மற்றும் மின் அஞ்சல் முகவரி போன்ற தகவல்களைத் தரவும். உங்களுக்கான டிஜிட்டல் லாக்கர் தரப்படும் பணியில் ஒன்றாக, உங்கள் மொபைல் போனுக்கு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பாஸ்வேர்ட் ஒன்று வழங்கப்படும். இந்த பாஸ்வேர்ட் உங்கள் மின் அஞ்சல் முகவரிக்கும் வழங்கப்படும். இதனை தளத்தில் அதற்கெனத் தரப்பட்டுள்ள இடத்தில் அமைத்து on “Validate OTP” என்ற இடத்தில் கிளிக் செய்திடவும். உங்களுக்கான டிஜிட்டல் லாக்கர் தரப்படும். பின்னர், உங்கள் யூசர் நேம், பாஸ்வேர்ட் கொடுத்து, டிஜிட்டல் லாக்கரை இயக்கலாம்.

உங்கள் ஆவணங்களை மின்னணு நகலாக, XML பார்மட் பைலாக இதில் சேமித்து வைக்கலாம். சான்றிதழ் நகல்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பெயர், பெற்ற நாள் கொண்டு பைலின் பெயரை அமைக்கவும். இதன் மூலம், நாம் நம் விண்ணப்பங்களுடன், சான்றிதழ் நகல்களை இணைக்க வேண்டிய தில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு, இந்த டிஜிட்டல் லாக்கர் எண்ணைத் தந்துவிட்டால், அவர்கள் இந்த ஆவணங்களைப் பெற்று சரி பார்த்துக் கொள்ளலாம். இதனால், தேவையற்ற வகையில் டாகுமெண்ட் நகல்களை இணைத்து எதற்கும் விண்ணப்பிக்க தேவை இல்லை.

இதில் பதிந்தவுடன் ஒவ்வொருவருக்கும் ஒரு Issuer ID வழங்கப்படும். இது வழங்கப்பட்ட பின்னர், அவர் தன் ஆவணங்களை XML பார்மட்டில் பதியலாம். பதியப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஒரு uniform resource identifier (URI) தரப்படும். அது நம் ஆதார் எண்ணுடனும் இணைக்கப்பட்டிருக்கும். நம் ஆவணங்களைக் காட்ட விரும்புபவருக்கு இந்த முகவரியைத் தரலாம். அவர் இதே போல, பயனாளராக ஓர் அக்கவுண்ட் திறந்து ஆவணங்களைப் பார்வையிடலாம். ஒவ்வொருவருக்கும் 10 எம்.பி. இடம் கொண்ட டிஜிட்டல் லாக்கர் தரப்படுகிறது.

அரசு அண்மையில் தான் இந்த திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளது. இதனைச் சோதனை முறையில் மட்டுமே பயன்படுத்திப் பார்க்கலாம். இது முழுமையான பின்னர், இது குறித்த மத்திய அரசின் ஆணை வெளியிடப்படும். இதன் வெற்றி, நம் அரசு துறைகள் மற்றும் நம்மிடம் உள்ளது.கூடுதல் தகவல்களை அறிய http://cdn.mygov.nic.in/bundles/frontendgeneral/images/beta-release-of-digital-locker-system.pdf என்னும் இணைய தளம் செல்லவும்.

மைக்ரோசாப்ட் தரும் மடிக்கக் கூடிய கீ போர்ட்

தன்னுடைய லூமியா 640 மற்றும் லூமியா 640 எக்ஸ்.எல். மொபைல் போன்களின் அறிமுகத்துடன், வேறு சில அறிவிப்புகளையும் வெளியிட்டது மைக்ரோசாப்ட் நிறுவனம். முதன் முதலாக மடித்து வைத்து எடுத்துச் சென்று, பின் விரித்து வைத்து செயல்படுத்தக் கூடிய கீ போர்ட் ஒன்றை, அண்மையில் பார்சிலோனாவில் நடை பெற்ற உலக மொபைல் கருத்தரங்கில் அறிமு கப்படுத்தியது. ஆண்ட்ராய்ட், ஐ.ஓ.எஸ். மற்றும் விண்டோஸ் இயக்க முறைமைகளில் இதனை இயக்கலாம். இது விண்டோஸ் 10 சிஸ்டத்தில், டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களுடனும் இயங்கும். இது ஒரு வயர்லெஸ் கீ போர்ட். புளூடூத் இணைப்பில் இயங்கும். மொபைல் போனில் இயங்கும் விண்டோஸ் 10 இயக்கத்திலும் இதனை இயக்கலாம்.

இது எப்போது விற்பனைக்கு வரும் என்றும் அதன் விலை குறித்தும் மைக்ரோசாப்ட் இது வரை அறிவிக்கவில்லை.

இந்த ஆண்டு, விண்டோஸ் 8.1 சிஸ்டம் பயன் படுத்தும் அனைவருக்கும், விண்டோஸ் 10 இல வசமாக அப்டேட் செய்திட வழங்கப்படும் என அறிவித்தது. விண்டோஸ் 10 சிஸ்டத்தின் சில அம்சங்கள், அது பயன்படுத்தப்படும் ஹார்ட்வேர் அமைப்பினைப் பொறுத்து வேறுபடும். ஏறத்தாழ 20 லட்சம் பேர் விண்டோஸ் இன்ஸைடர் புரோ கிராமில் பதிந்து, விண்டோஸ் 10 சோதனைத் தொகுப்பினை சோதித்து வருகின்றனர். இவர்கள், ஏறத்தாழ 9 லட்சம் பதிவுகளை பின்னூட்டமாக அளித்துள்ளனர். அவை ஒவ்வொன்றும் பரிசீலிக் கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்த புரோகிராமில் பதிந்தவர்களுக்கு, விண்டோஸ் 10 சிஸ்டம் பெறுவதில் முன்னுரிமை அளிக் கப்படும். கார்டனா டூல், விண்டோஸ் 10 சிஸ் டத்தின் ஒரு பகுதியாகவே தரப்படும். இந்த அறிவிப்புகளை மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சாதனங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் துணைத் தலைவர் வெளியிட்டார்.

மொபைல் போனுக்கான விண்டோஸ் 10 தொழில் நுட்ப சோதனைத் தொகுப்பு அண்மையில் வெளியிடப்பட்டது. இதுதான் இந்த முறையில் முதலாவதாக வெளியிடப் பட்ட தொகுப்பு என்றும், இது இன்னும் உரு வாக்க வளர்ச்சியில் உள்ளது என்றும் அறிவிக் கப்பட்டது.

இதுவரை 70 கோடி ஐபோன்கள் விற்பனை

அண்மையில் சான் பிரான்ஸிஸ்கோ நகரில் நடைபெற்ற ஆப்பிள் நிறுவனத்தின் "வசந்தம் நோக்கி" என்ற விழாவில், இந்நிறுவனத் தலைவர் டிக் குக் பேசுகையில், இதுவரை உலகெங்கும் 70 கோடி ஐபோன்கள் விற்பனையாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு முதல் ஐபோன் விற்பனைக்கு வந்தது. ஏழு ஆண்டுகளில் இந்த சாதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓராண்டுக்கு முன் ஆப்பிள் ஐபோன் விற்பனை 50 கோடியைத் தாண்டி இருந்தது. கடந்த ஓராண்டில், ஐபோன் விற்பனை இலக்குகளை மீறியதாக இருந்துள்ளது. இதற்குக் காரணம் சென்ற ஆண்டில் அறிமுகமான ஐபோன் 6 மற்றும் ஐபோன் 6 ப்ளஸ் தான் காரணம். சென்ற ஆண்டின், இறுதி மூன்று மாதங்களில் மட்டும், ஆப்பிள் 7 கோடியே 50 லட்சம் போன்களை விற்பனை செய்தது.

உலக அளவில், ஸ்மார்ட் போன் விற்பனை வேகத்தைக் காட்டிலும், ஐபோன் விற்பனை பல மடங்கு உயர்வாக இருந்ததாக, டிம் குக் தெரிவித்துள்ளார். மற்ற போன்களின் விற்பனை உயர்வு 26% ஆக இருந்த போது, ஆப்பிள் போன்களின் விற்பனை உயர்வு 49% ஆக இருந்தது.

இதே வேகத்தில் சென்றால், நூறு கோடி ஐபோன் விற்பனை என்ற இலக்கினை எட்டிட, வெகு காலம் ஆகாது என ஆப்பிள் நிறுவனம் எண்ணுகிறது.

உலக மொபைல் கருத்தரங்கு

மொபைல் போன் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் இதில் ஈடுபடும் முக்கியமானவர்கள், கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என எண்ணுவது, ஆண்டு தோறும் பார்சிலோனாவில் நடைபெறும் உலக மொபைல் கருத்தரங்காகும். 2015 ஆம் ஆண்டில், இந்த கருத்தரங்கு பத்தாவது ஆண்டாக நடைபெறுகிறது. மொபைல் வர்த்தக அமைப்புகள் இணைந்து இதனை நடத்துகின்றன. ஒரு லட்சம் சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பளவில், கண் காட்சி அரங்குகள் இடம் பெற்றன. 2000க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பிரதி நிதிகள் பங்கு கொண்டனர். இவர்களில் 167 ஸ்பானிஷ் நிறுவனங்களும் அடக்கம். 201 நாடு களிலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் 43.6 கோடி யூரோ அளவிற்கு வர்த்தகம் மேற்கொள்ளப்பட் டது. இதில் பணியாற்றிய தற்காலிக ஊழியர்கள், 12,000 பேருக்கு மேலானவர்களாவர்.

சில நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதி காரிகளின் அலுவலக அறை போலவே இங்கும் வடிவமைக்கப்பட்டன. அவர்கள் அதே சூழலில் இங்கும் பணியாற்ற வேண்டும் என்பதற்காக.

இந்த ஆண்டு மிகப் பெரிய அளவில் கண் காட்சி மையங்களைக் கொண்டிருந்த நிறுவ னங்கள் எரிக்சன், நோக்கியா, ஹுவே, சோனி, சாம்சங், மைக்ரோசாப்ட், குவால்காம், பேஸ்புக், இண்டெல் மற்றும் இஸட் டி இ (ZTE) ஆகி யவை ஆகும்.

புதிய மொபைல் போன்கள் அறி முகத்துடன், இந்த கருத்தரங் கத்தில், நம் வாழ்க் கையின் அனைத்து சாதனங்களையும் இணையத்தில் இணைப்பது, இணைய இணைப்பிலான அணியும் சாதனங்கள், மொபைல் வழி பணம் செலுத்தும் முறை ஆகியவை குறித்து விவாதங்களும் கருத்து பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டன.

சென்ற ஏப்ரல் 2014ல், உலகில் 700 கோடி மொபைல்கள் பயன்பாட்டில் இருந்த தன. இவற்றில் 200 கோடி மொபைல்கள் பிராட்பேண்ட் இணைப்பினைப் பெற்றிருந்தன. இந்த ஆண்டு பிப்ரவரியில் இது 740 கோடியாக இருக்கும் என உலக ஜி.எஸ்.எம். அமைப்பு கூறி யுள்ளது. உலக ஜனத்தொகையைக் காட்டிலும் (ஐ.நா. கணக்கின் படி உலக ஜனத்தொகை 720 கோடி) மொபைல் போன் இணைப்புகள் அதிக மாக இருக்கும்.

இரண்டு கோடி சாம்சங் போன்கள் கேட்டு முன் பதிவு

சென்ற வாரம் பார்சிலோனாவில் நடைபெற்ற, உலக மொபைல் கருத்தரங்கில் அறிமுகமான சாம்சங் காலக்ஸி எஸ்6 மற்றும் காலக்ஸி எஸ் 6 எட்ஜ் ஸ்மார்ட் போன்களுக்கான முன் பதிவு தொடங்கியுள்ளது. எஸ் 6 ஸ்மார்ட் போன் கேட்டு, இந்த செய்தியை எழுதும் வரை ஒரு கோடியே 50 லட்சம் பேரும், எஸ் 6 எட்ஜ் போன் வாங்கிட 50 லட்சம் பேரும் முன் பதிவு செய்துள்ளனர். இந்த முன்பதிவு இன்னும் தொடந்து நடைபெற்று வருகிறது.

32 ஜி.பி. அளவிலான சாம்சங் காலக்ஸி எஸ் 6 விலை 700 யூரோ (ரூ.47,000) எனவும், எட்ஜ் போன் 850 யூரோ (ரூ.57,000)எனவும் அறிவிக் கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவை லாக் செய் யப்படாத போன்களின் விலை.

இதற்கு முன் வெளியான சாம்சங் காலக்ஸி ஸ்மார்ட் போன்களுக்கான பதிவைக் காட் டிலும், இந்த புதிய போன்களை வேண்டி பதிவு செய்தோர் எண்ணிக்கை கூடுதல் என, இந்நிறு வனத் தலைவர் ஷின் ஜாங் கையூன் அறிவித் துள்ளார். இந்த இரண்டு புதிய ஸ்மார்ட் போன் களிலும் 16 எம்.பி. திறன் கொண்ட பின்புறக் கேமராவும், 5 எம்.பி. திறன் கொண்ட முன் புறக் கேமராவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் ராம் மெமரி LPDDR4 RAM ஆக 3 ஜி.பி. அளவில் தரப்படுகிறது. 32, 64 மற்றும் 128 ஜி.பி. தேக்க நிலை நினைவகத்துடன் இவை வடிவ மைக்கப்பட்டு கிடைக்க இருக்கின்றன.

முன்னர் காலக்ஸி எஸ் 4 அறிமுகமான போது, ஒரே மாதத்தில் ஒரு கோடி போன் விற்பனை யானது. ஆனால், காலக்ஸி எஸ் 5 அந்த அள விற்கு விற்பனையை எட்டவில்லை. ஆனால், காலக்ஸி எஸ்6 இந்த ரெகார்டுகளை முறியடித் துவிடும் எனத் தெரிகிறது.

உயரும் மொபைல் டேட்டா பரிமாற்றம்

நோக்கியா நெட்வொர்க்ஸ், சென்ற 2014 ஆம் ஆண்டில், மொபைல் போன் பயன்பாடு குறித்து மேற்கொண்ட ஆய்வில், இந்தியாவில், மொபைல் வழி டேட்டா பரி மாற்றம் 74 சதவீதம் அதிகரித்துள்ளதாக அறிவித் துள்ளது. இதற்கு 2ஜி மற்றும் 3ஜி மொபைல் பிராட்பேண்ட் சேவைகளே அடிப்படைக் கார ணங்கள் என்றும் கண்டறிந்துள்ளது.

Nokia Networks MBit Index கணக்கின்படி, 3ஜி டேட்டா பரிமாற்றம் இந்தியாவில், சென்ற ஆண்டில் 114 சதவீதம் அதிகரித்துள்ளது. 2ஜி டேட்டா பரிமாற்றம் 41 சதவீதம் கூடுதலாக இருந்துள்ளது. இந்த ஆய்வில் தெரியவந்துள்ள தகவல்களின்படி, சென்ற ஆண்டில், ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட 3ஜி டேட்டா பயன்பாடு 41% ஆகவும், டிசம்பர் மாதத்தில் 52% ஆகவும் இருந்தது. 3ஜி டேட்டா பயன்பாடு,சராச ரியாக மாதந்தோறும் 29% அதிகரித்து, 688 எம்.பி. என்ற அளவினை எட்டியது. அதே நேரத்தில், 2ஜி டேட்டா பயன்பாடு 48% அதிகரித்து, 216 எம்.பி. ஆக உயர்ந்தது. 3ஜி பயனாளர்கள், 2ஜி பயனாளர் களைக் காட்டிலும் 3.2 மடங்கு அதிக டேட்டா வினைப் பயன்படுத்தினர்.

3ஜி மற்றும் 4ஜி தொழில் நுட்ப வசதி கொண்ட ஸ்மார்ட் போன்கள் விற்பனை மற்றும் பயன்பாடு, 3ஜி டேட்டா பயன்பாடு அதிகமாக ஓர் அடிப்படைக் காரணமாக இருந்த தது. மேலும், இதே காலத்தில், 2ஜி டேட்டா தொழில் நுட்பங்கள் நவீனப்படுத்தப்பட்டன. 4ஜி சேவைகள், சில தொலை தொடர்பு மண்ட லங்களில் அமலுக்கு வந்தன.

இந்தியாவில், 4ஜி பயன்பாடு இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. 55 லட்சம் ஸ்மார்ட் போன்கள், 4ஜி அலைவரிசையைப் பயன்படுத்தும் வகையில் இருந்தாலும், 85 ஆயிரம் வாடிக்கையாளர்களே, எல்.டி.இ. அலைவரிசையைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், இந்தியாவில் இயக்கத்தில் இருக்கும் 3ஜி அலைவரிசை தொழில் நுட்பம் கொண்ட ஸ்மாட் போன்களின் எண்ணிக்கை 13 கோடியாகும்.

பெர்சனல் பிரேக்

இணைய வேகம் அதிகரித்தால், இணையம் அனைத்து இடங்களிலும் நம்மைச் சுற்றி இருந்தால், இவ்வளவு செயல்பாடுகளை மேற்கொள்ளலாம் என்பது ஆச்சரியமும், மகிழ்ச்சியும் கலந்த தகவலாக உள்ளது. இறுதியில், நீங்கள் நகைச்சுவைக்காக எழுதி இருந்தாலும், கனவுகளைக் கூட நம் இணையம் வழி செட் செய்யக் கூடிய நாள், தொழில் நுட்பம் நிச்சயம் வரும் என எதிர்பார்ப்போம். "வருகிறது 5ஜி இணைப்பு" கட்டுரையை எழுதிய ஆசிரியருக்கு என் பாராட்டுதல்கள். மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் கட்டுரை உள்ளது.

டாக்டர் என். தெய்வேந்திரன், கோவை.

"நமக்கு இன்னும் 4ஜி இணைப்பே சரியாகக் கிடைக்கவில்லை. 5ஜி எங்கே வரப்போகிறது?" என்று நம்மை நாமே தாழ்த்திக் கொள்ளாமல், வர இருக்கும் தொழில் நுட்பம் குறித்து அறிந்து வைத்து, அதற்குத் தயாராய் இருக்க வேண்டும். அந்த வகையில் 5ஜி குறித்த தங்கள் கட்டுரை, தகவல்களைச் சரியாகத் தந்துள்ளது. குறிப்பாக படங்கள் பார்த்தவுடன் தகவல்களைத் தருவதாக உள்ளன. பாராட்டுதல்கள்.

பேரா. சி.எஸ். இராமமூர்த்தி, சென்னை.

கூகுள் நிறுவனம் மொபைல் சேவை தரும் நெட்வொர்க்கினைத் தொடங்கப் போகிறதா? கேட்கவே மகிழ்ச்சியாகவும், அதிக எதிர்பார்ப்பினைத் தருவதாகவும் உள்ளது. உலகம் முழுவதும் இயங்கும் ஒரு நெட்வொர்க்கினை, கூகுள் போன்ற நிறுவனங்களே அமைக்க முடியும். அப்படி அமைத்து, அதில் சேவை பெற்றால், எந்த நாடு சென்றாலும், ரோமிங் இல்லாமல் தொடர்பு கொள்ள முடியும் என்றால், நினைக்கவே மகிழ்ச்சியாக உள்ளது. உலகம் நம் உள்ளங்கையில் நிச்சயமாய் வந்துவிடும்.

எஸ். மாலா ராணி, திருமங்கலம்.

இன்றைக்கு இணைய வர்த்தகம் மேம்பட வேண்டும் என்றால், மாநில மொழிகளில் மொபைல் மற்றும் இணையப் பயன்பாடு இருக்க வேண்டும். இதற்கு அரசை நம்பாமல், நாமே முயற்சிகளை எடுக்க வேண்டும். யார் தொடங்குவது? என்றில்லாமல், யாரெல்லாம் முடியுமோ, அவர்கள் எல்லாரும் பங்களிப்பு செய்தால், நல்ல, சரியான செயல்பாடு தானாகவே முன்வரும். இதனை வலியுறுத்தி நீங்கள் இன்னொரு கட்டுரையை வெளியிட வேண்டும்.

டி.கெ. நல்லசிவம், புதுச்சேரி.

வாட்ஸ் அப் செயல்பாடு குறித்து பலர் தொடர்ந்து ஆதங்கப்பட்டுக் கொண்டே உள்ளனர். பாதுகாப்பு பயம் மட்டுமல்ல. மொபைல் போனின் பேட்டரி சக்தியையும் இது அதிகம் சாப்பிடுவதாகப் பலர் குறை சொல்கின்றனர். வாட்ஸ் அப் நிறுவனம் அனைத்து குறைகளையும் தன் கவனத்தில் கொண்டு வந்து, அவற்றை நீக்க முயற்சிக்க வேண்டும். இல்லை எனில், இன்ஸ்டண்ட் மெசஞ்சராகப் பெற்றிருக்கும் தன்னுடைய முதல் இடத்தை இழந்துவிடும்.

எஸ்.சாமுவேல் தேவநேசன், பொள்ளாச்சி.

சாம்சங் தர இருக்கும் புதிய ஸ்மார்ட் போன்கள் குறித்த தனிக் கட்டுரை, அவற்றின் பயன்பாடுகளை விரிவாகச் சொல்கிறது. ஆனால், இது சாதாரண மக்களுக்குத் தேவை இருக்காதே. விலை குறைந்த, நவீன வசதிகள் தரும் ஸ்மார்ட் போன்களே, அதிகம் விற்பனையாகும். இணையத்தை எளிதாகக் கொண்டு வரும் போன்களே பயனுள்ளவையாக இனி இருக்கும்.

சி.ஆர். சுந்தரேசன், திண்டுக்கல்.

"சாம்சங் பே" எல்லாம் நம்ம ஊருக்கு ஒத்து வருமா? இதனைப் புழக்கத்தில் கொண்டு வருவதில் வங்கிகளும், வர்த்தக நிறுவனங்களும், நம் மக்களை ஏமாற்றாமல் இருக்க வேண்டும். இப்போதே சில கடைகள், கிரெடிட் கார்ட் என்றால், 3 சதவீதம் பில் அதிகம் போடுகிறார்கள். இதை அரசு தட்டிக் கேட்பது இல்லையே?

என்.மஞ்சுளா, சிவகாசி.

கேள்வி – பதில்

– டாக்டர்.பெ. சந்திர போஸ் –

கேள்வி: *பலர் விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு மாறாமல், விண்டோஸ் 7 சிஸ்டத்திலேயே இருக்க ஆசைப்படுகின்றனர். விண்டோஸ் 8 சிஸ்டம் சென்றவர்கள், மீண்டும் விண் 7க்கு வர ஆசைப்படுகின்றனர். இவர்களுக்காக ஏன், டச் ஸ்கிரீன் மானிட்டர்களை, மைக்ரோசாப்ட் தயாரித்து குறைந்த விலையில் வழங்கக் கூடாது?*

ஆர். பிரகாஷ், கோவை.

பதில்: பிரகாஷ், நீங்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். மைக்ரோசாப்ட் நிறுவனம் மானிட்டர்களைத் தயாரித்து விற்பனை செய்வதில்லை. டச் ஸ்கிரீன் பயன்பாடு, ஸ்மார்ட் போன் மற்றும் டேப்ளட் பி.சி.க்களில் இருப்பதைப் போல கம்ப்யூட்டர்களில் வசதியாக இல்லை எனப் பெரும்பாலான வாடிக்கையாளர்கள் எண்ணுவதால், அவர்கள் இதனை ஒரு பொருட்டாகக் கொண்டு அதன் அடிப்படையில், விண்டோஸ் 8 சிஸ்டத்தை விட்டு வருவதில்லை. மேலும், விண்டோஸ் 8 சிஸ்டத்தைப் பொறுத்தவரை, அதில் டச் ஸ்கிரீன் பயன்பாட்டிற்கு வழி இருந்தாலும், மவுஸ் கீ போர்ட் கொண்டும், டச் ஸ்கிரீன் அல்லாத திரைகளுடனும் இயக்கலாம்.

விண்டோஸ் 8.1 சிஸ்டம் கொண்ட லேப் டாப் கம்ப்யூட்டரை நான் பயன்படுத்தி வருகிறேன். ஆனால், டச் ஸ்கிரீனைத் தொட்டு இயக்குவதைக் காட்டிலும், பழக்கத்தின் அடிப்படையில் பல வேளைகளில், கீ போர்ட் மூலமே இயக்கி வருகிறேன்.

கேள்வி: *கம்ப்யூட்டர் பயன்பாட்டில் SAN என்பது எதனைக் குறிக்கிறது? இது ஸ்டோரேஜ் வகை என்று என் நண்பன் கூறுகிறார்? விளக்கம் அளிக்கவும்.*

என். பிரகாஷ் குமார், மதுரை.

பதில்: SAN என்பது Storage Area Network



என்பதன் விரிவாக்கம். நெட்வொர்க் ஒன்றில், டேட்டா ஸ்டோர் செய்திட, பல இணைக்கப்பட்ட சாதனங்களுக்கு வழங்கப்படும் வசதியை இது குறிக்கிறது. பல ட்ரைவ்கள் இணைக்கப்பட்டு, ஒரே ஸ்டோரேஜ் ட்ரைவாகப் பல சாதனங்கள் பகிர்ந்து கொண்டு செயல்பட அளிக்கப்படும் செயல்பாட்டினையும் இது குறிக்கிறது.

கேள்வி: *என்னிடம் விண்டோஸ் 7 இயங்கும் லேப்டாப் உள்ளது. டெஸ்க்டாப் கம்ப்யூட்டரும் உள்ளது, இரண்டு ஆப்பரேட்டிங் சிஸ்டங்களும், விலை கொடுத்து வாங்கி பதியப்பட்டவை. என் சந்தேகம் என்னவென்றால், விண்டோஸ் 10 இலவசமாக டவுண்லோட் செய்து பதிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதே. அப்படியானால், ஒரே கம்ப்யூட்டரில் இரண்டு ஆப்பரேட்டிங் சிஸ்டங்களையும், இயக்க முடியுமா?*

என். தினேஷ் முருகன், செய்யாறு.

பதில்: இந்த சந்தேகம் பலருக்கு வந்திருப்பதால், கொஞ்சம் விரிவாகவே சொல்கிறேன். விண்டோஸ் 10 உங்கள் கம்ப்யூட்டரில் இல

வசமாக டவுண்லோட் செய்து, இயக்கத் தொடங்கினால், விண்டோஸ் 7 முழுமையாக நீக்கப்படும். புதிய விண்டோஸ் 10 சிஸ்டம் ஒன்றை, கட்டணம் செலுத்தி வாங்கினால், அதனையும், விண்டோஸ் 7 சிஸ்டத்தினையும் டூயல் பூட் சிஸ்ட அமைப்பில் இயக்கலாம். இவற்றை இன்ஸ்டால் செய்திட, உங்கள் கம்ப்யூட்டரில் இடம் இருக்க வேண்டும். தற்போது விண்டோஸ் 10 தொழில் நுட்ப முன்னோட்ட சோதனைத் தொகுப்பினைப் பலர் இது போலத்தான் இயக்கி வருகின்றனர்.

விண்டோஸ் 10 சிஸ்டத்தினை, விண் 7 மற்றும் 8.1 சிஸ்டங்கள் இருக்கின்ற கம்ப்யூட்டர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான காரணமே, அதிக எண்ணிக்கையில் பயனாளர்களை, அவர்களின் அதனை அனைத்து கம்ப்யூட்டர்களிலும் சீராகப் பயன்பாட்டில் அமைக்கத்தான். மொபைல் போன்களிலும் விண்டோஸ் 10 தருவதன் மூலம், அதிகமான எண்ணிக்கையில் பயன்படுத்தப்படும் ஆப்பரேட்டிங் சிஸ்டமாக, விண்டோஸ் 10 சிஸ்டத்தினை மைக்ரோசாப்ட் கொண்டு வரத் திட்டமிடுகிறது.

கேள்வி: என்னுடைய இணைய இணைப்பினை ப்ராட்பேண்ட் இணைப்பிற்கு மாற்றியமைத்து, அதனை வை பி ஆகவும் ஆக்கியுள்ளேன். மோடம் ஒன்று ரௌட்டராகவும் இயங்குகிறது. இதிலிருந்து வரும் சிக்னல்களை, என் வீட்டின் எல்லைக்குள் அமைக்க முடியுமா? அவ்வாறு கட்டாயம் அமைக்க வேண்டுமா? அடுத்த வீட்டிற்குச் செல்கையில், நானோ அல்லது அவர்களோ இதனைப் பயன்படுத்த முடியுமா?

என். சசி சேகரன், சென்னை.

பதில்: உங்கள் வீட்டில் வைத்து இயக்கும் மோடத்திலிருந்து, வை பி சிக்னல்கள், வீட்டிற்கு வெளியே நீண்ட தூரம் செல்ல வாய்ப் பில்லை. உங்கள் வீடும் அடுத்த வீடும் எவ்வளவு நெருக்கத்தில் உள்ளன என்பதைப் பொறுத்து, அடுத்த வீட்டில் இந்த சிக்னல்களைப் பயன்படுத்தலாம். ஆனால், அது அவ்வளவு எளிதல்ல. இதனை முழுமையாகப் புரிந்து கொள்ள, வை பி சிக்னல்கள் எப்படி செயல்படுகின்றன என்று பார்க்கலாம்.

உங்களுடைய ரௌட்டர், வை பி ரேடியோ அலைகளை உருவாக்கி, உங்கள் வீட்டில் அதனை ஒலி பரப்புகிறது. உங்கள் வீட்டில் உள்ள கம்ப்யூட்டர் மற்றும் பிற வை பி பயன்படுத்தக் கூடிய சாதனங்கள், இந்த அலைகளைப் பெற்றுப் பயன்படுத்தி, மோடத்திற்குத் தகவல்களை அனுப்பி, பெற்று இணையத்தை அணுக முடிகிறது.

இந்த ரேடியோ அலைகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. கீழ்த் தளத்தில் ரௌட்டரை வைத்தால், உங்கள் வீட்டில் சக்தியுள்ள அலைகள் கிடைக்காது. கம்ப்யூட்டர் மலருக்கு மோடம் குறித்து வருகின்ற கேள்விகள் அனைத்தும், இந்த அலைகளை வெகு தூரத்திற்கு இழுத்துச் செல்ல முடியுமா என்பது குறித்தே இருக்கும். ஆனால், நீங்கள், மற்றவர்கள், உங்கள் நெட்வொர்க்கில் இந்த அலைகளைப் பெறுவதன் மூலம் இணைந்து விடுவார்களோ என்பதுதான். உங்களுடைய வயர்லெஸ் நெட்வொர்க்கினை, பாஸ்வேர்ட் ஒன்றின் மூலம் பாதுகாத்துக் கொண்டால், நிச்சயம் அந்த பாஸ்வேர்ட் தெரிந்தவர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.

உங்களுக்கு இணைய சேவையை வழங்கும் நிறுவனம், ஏற்கனவே, பாஸ்வேர்ட் கொடுத்துப் பாதுகாக்கும் சந்தர்ப்பத்தினை உங்களுக்கு வழங்கி இருக்கும். நீங்களும் பாஸ்வேர்ட் போட்டு பாதுகாப்பில் வைத்திருப்பீர்கள். ஒருமுறை ஒரு சாதனத்தில், இந்த பாஸ்வேர்ட் போட்டு இணைப்பினைப் பெற்றிருந்தால், மறுமுறை பாஸ்வேர்ட் போடாமலேயே, அந்த சாதனத்தில் இணைய இணைப்பு கிடைக்கும். எனவே, அடுத்தவருக்கு உங்கள் பாஸ்வேர்டினைத் தர வேண்டாம். அப்படியே தந்துவிட்டால், உடனே அடுத்த வேளையில் அதனை மாற்றிவிடவும்.

கேள்வி: எனக்கு இணைய இணைப்பு வழங்கும் நிறுவனம், டேட்டா அளவு எதனையும் நிர்ணயம் செய்திடாமல், ஒரு மணி நேரம் பயன்படுத்தினால், இவ்வளவு எனக் கணக்கிட்டு நான் கட்டிய பணத்தில் இருந்து கழித்துக் கொண்டுள்ளது. எனவே, குறைந்த நேரத்தில் அதிகப் பயன்பாட்டினை மேற்கொள்ள விரும்புகிறேன். இணைய இணைப்பு இல்லாமல், எனக்கு வந்திருக்கும் இமெயில்களைப் படிக்க முடியுமா? நான் தயாரிக்கும் இமெயில்களை அனுப்ப முடியுமா? அதற்கு என்ன செட் செய்திட வேண்டும். எந்த புரோகிராமினை டவுண்லோட் செய்து, இன்ஸ்டால் செய்திட வேண்டும்?

டி. மோகனா, சென்னை.

பதில்: இணைய இணைப்பு இல்லாமல், உங்களுக்கு வந்திருக்கும் மின் அஞ்சல்களைப் படிக்க இயலாது. குறைந்த நேரத்தில் அனைத்தையும் டவுண்லோட் செய்துவிட்டு, பின்னர் நேரம் கிடைக்கும்போது படிக்க திட்டமிட்டால், அதற்கான இமெயில் கிளையண்ட் புரோகிராமினைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும். அவுட்லுக், விண்டோஸ் மெயில் அப்ளிகேஷன் அல்லது தண்டர்பேர்ட் போன்ற இமெயில்

கிளையண்ட் புரோகிராம்கள் இதற்குப் பயன் படலாம். இதில் ஒன்றை இன்ஸ்டால் செய்து, உங்களின் மின் அஞ்சல் முகவரி, இணைய சேவை வழங்கும் நிறுவனத்தின் சர்வர் முகவரி ஆகியவற்றைச் சரியாக அமைக்க வேண்டும். கடிதங்களைப் படித்து, பதில்களையும் தயார் செய்து, மொத்தமாக அனுப்பலாம். இதில், இணைய இணைப்பிற்கான நேரம் குறையலாம். ஆனால், மிகவும் குறைவான அளவில் தான் பணத்தை மிச்சம் செய்திடலாம். பிரவுசிங் செய் திடுகையில், தகவல் தேடுகையில், உங்களின் பணம் மிச்சப்படுத்தும் எண்ணம் இருந்தால், நீங்கள் சரியாகத் தேட முடியாது.

கேள்வி: விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தில், ஆபீஸ் 2003 பயன்படுத்தி வருகிறேன். என் அலுவலகத்தில் அனைவருக்கும் டாகுமெண்ட்டில் உள்ள அனைத் தையும் காட்டக் கூடாது. எனவே, என் விருப்பப்படி, சில பாராக்களை மறைத்து வைத்து, பின், தேவைப்ப டும்போது, மீண்டும் பார்க்கும் வகையில் கொண்டு வந்து, அமைக்க முடியுமா?

ஏ.எஸ். தங்கராஜ், புதுச்சேரி.

பதில்: உங்கள் விருப்பத்தினை நிறை வேற்றும் வகையில், வேர்ட் தொகுப்பில் டூல் உள்ளது. முதலில் டாகுமெண்ட்டினைத் திறந்து, மறைக்க வேண்டிய பாராவினைத் தேர்ந்தெடுக்கவும். பின் மெனு பார் செல்லவும். அதில் Format தேர்ந்தெடுத்து அதில் Fonts பிரிவைக் கிளிக் செய்திடுக. இதில் கிடைக்கும் புதிய விண்டோவில், Effects என்ற பகுதியில் இறுதியாகக் காட்டப்படும் Hidden என்னும் பாக்ஸின் முன், டிக் அடையாளம் ஏற்படுத் தவும். பின் மீண்டும் இந்த டெக்ஸ்ட் காட் டப்பட வேண்டும் என்றால் Ctrl+A கொடுத்து மீண்டும் அதே முறையில் பாண்ட் விண்டோ விற்குச் சென்று டிக் அடையாளத்தை எடுத் துவிடவும். இப்போது மறைக்கப்பட்ட டெக்ஸ்ட் மீண்டும் காட்டப்படும்.

கேள்வி: முன்பு "ஆக்டிவ் எக்ஸ் கண்ட்ரோல்" குறித்து விளக்கமாகப் பதில் சொல்லி இருந்தீர்கள். மீண்டு நினைவு படுத்திப் பார்க்கையில் சரியாக விளங்கவில்லை. விண்டோஸ் இயக்கத்தில் இயங்கும் சிறிய புரோகிராம்கள் என்று மட்டும் தெரிகிறது. இவற்றின் பயன் குறித்து மீண்டும் கூறவும்.

ஆ. இசைராணி, சிதம்பரம்.

பதில்: பரவாயில்லை. உண்மையில் உங்களுக்கு உள்ள பிரச்னையை வெளிப் படையாகக் கூறி விளக்கம் கேட் டுள்ளீர்கள். இதனைப் பாராட் டுகிறேன். இதோ, மீண்டும் முழுமையாக விளக்குகிறேன்.

ஆக்டிவ் எக்ஸ் கண்ட்ரோல் என்பவை அடிப் படையில், விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ் டத்தில் இயங்கும் சிறிய புரோகிராம்கள். இவை விண்டோஸ், விண்டோஸ் மீடியா பிளேயர் மற்றும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் ஆகியவை, அப்ளிகேஷன்களை அவர்களின் எல்லைக்குள் ளேயே இயக்க இந்த ஆக்டிவ் எக்ஸ் கண்ட்ரோல் புரோகிராம்கள் உதவுகின்றன. ஏறத்தாழ ஜாவா ஆப்லெட் எனப்படும் புரோகிராம்களின் செயல் பாட்டினை ஒத்ததே இவை.

இந்த ஆக்டிவ் எக்ஸ் கண்ட்ரோல் புரோகி ராம்கள் இயங்குவதன் மூலம், அடிப்படையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தாமல், சிறிய அளவில், இயக்கத்தில் மாற்றங்களை மேற் கொள்ள இயலும். மொஸில்லா பயர்பாக்ஸ் பிரவுசர், தன் வாடிக்கையாளர்கள், ஆக்டிவ் எக்ஸ் புரோகிராம்களை அணுக ஓர் ஆட் ஆன் தொகுப்பினைக் கொண்டுள்ளது.

ஆனால், இவை இயங்குவதில் சிக்கல் உள் ளது. இந்த புரோகிராம்கள், மால்வேர் புரோகி ராம்கள் தாக்கும் அளவிற்கு இடம் அளிக்கும் வகையில் இயங்குகின்றன. இவற்றைப் பயன் படுத்தி கம்ப்யூட்டருக்குள் நுழையும் மால்வேர் புரோகிராம்களின் வழியை "drive-bys"என அழைக்கின்றனர். மேலும் தூரத்தில் இருந்தே நம் கம்ப்யூட்டர்களைக் கட்டுப்படுத்தத் திட்டமி டுபவர்களுக்கும் இவை வாகாக அமைகின்றன.

அப்படியானால், இவற்றைப் பயன்படுத் தாமல் இருக்கலாமே என்று நீங்கள் எண்ணலாம். அதனையும் நாம் மேற்கொள்ள வழி உள்ளது. கண்ட்ரோல் பேனல் சென்று, அங்கு Internet Properties என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இடையே Network and Internet என்ற விண்டோ வினைப் பெறவும். இங்கு Internet Options என்ற பிரிவில், Manage Browser Add-ons" என்ற ஆப்ஷனைப் பார்க்கலாம். இந்த விண்டோவிற்குச் சென்றவுடன், "Security" என்ற டேப்பில் கிளிக் செய் திடவும். இங்கு நம் பாதுகாப்பு எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதனை செட் செய்திட, ஒரு ஸ்லைடர் பார் ஒன்று தரப்பட்டிருக்கும். இதில் High என்பதில் செட் செய்தால், ஆக்டிவ் எக்ஸ் கண்ட்ரோல் புரோகிராம்கள் அனைத்தும் தடுக்கப்படும். இதில் என்ன பிரச்னை ஏற்படும் என்றால், சில இணைய தளங்கள், இவற்றைத் தடை செய்துவிட்டால், சரியாக இயங்காது.

இதற்குப் பதிலாக, நம் பிரவுசர்கள், இந்த தளம் வேண்டாம் என எச்ச ரிக்கை கொடுக்கும் தளங்களுக்குச் செல்லாமல் இருப்பதே நல்லது.

கேள்வி–பதில்